[8th September 1970

(3) *The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1970*
(L.A. Bill No. 25 of 1970)

THE HON. THIRU K.A. MATHIALAGAN : Mr. Deputy Chairman, I move—

"That the Tamil Nadu Appropriation (No. 5) * Bill, 1970 (L.A. Bill No. 25 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Appropriation (No. 5)* Bill, 1970 (L.A. Bill No. 25 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக 83 லட்ச ரூபாய் ''அப்ரோப்பிரியேஷனில்'' ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக மசோதா கொண்டுவந்து அன்று பேசினோம். அதற்குப் பின்னால் சில ஊர்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மிகவும் தவறான வழிகளில் ஈடுபட்டிருப்பதைச் சொல்லி அரசாங்கத்தின் கவனத்தை இந்த சந்தர்ப்பத்தில் ஈர்க்கலாம் என்று இருந்தேன். என் மனதிற்குப் பட்ட வகையில் கட்சி பேதமில்லாமல் சொல்ல விரும்புகிறேன். சட்டசபை அங்கத்தினர்கள், கீழ் சபை அங்கத்தினர்களானாலும் சரி, மேல் சபை அங்கத்தினர்களானாலும் சரி, அல்லது பாராளு மன்ற அங்கத்தினர்களானாலும் சரி, இந்தப் பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் நிற்காமலிருப்பது நம் எல்லோருக்கும் நல்லது என்று எண்ணுகிறேன். கடந்த 23-ம் தேதி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஜில்லாக்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இந்தத் தேர்தலில் பல இடங்களில் தலையிட்டிருப்பதைப்பற்றி விசாரித்து ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். நான் 4 ஜில்லாக்களுக்குப் போக முடியவில்லையென்றாலும், இரண்டு ஜில்லாக்களுக்குப் போனேன். ராமநாதபுரத்தில் அதிகமான தலையீடு நடந்திருக்கிறதென்று பொதுப்படையாகக் குற்றம் சாட்டவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள், பாராளு மன்ற அங்கத்தினர்கள் எங்கெங்கு நின்றார்களோ, அங்கெல்லாம் இந்தப் புகார்கள் வந்திருக்கின்றன. உதாரணமாக, மானாமதுரையில் நடந்த விஷயத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்களும் பேசினார்கள், நானும் பேசினேன். அதைத் திருப்பிச் சொல்லவேண்டியதில்லை. எங்கே பாராளு மன்ற உறுப்பினர் அல்லது மாநில சட்டசபை உறுப்பினர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவிக்கு நின்றாரோ, அது அங்கே குழப்பத்திற்குக் காரணமாகிவிட்டது. அதே மாதிரி மதுரை ஜில்லாவில் திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் ஒரு சட்ட சபை அங்கத்தினர் நின்றார். அவர் உடன் பிறந்தவர் போலீஸ் ஸ்டேஷனில் ஹெட் கான்ஸ்டபிளாக இருக்கிறார். அவர் என்ன செய்திருக்கிறார் என்ற

---

*Printed as Appendix V.

8st September 1970] [திரு. கே. ராஜாராம்]

குற்றங்களைப் பார்த்தால் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. அரிஜனங்களைக் கொண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனில் நிறுத்தி வைத்துவிட்டு, அவருடைய தம்பியாகிய சட்ட சபை அங்கத்தினரின் ஆட்கள் போய் வீடுகளைச் சேர்ந்து தாக்கியிருக்கிறார்கள். தானியங்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். போலீசில் கம்ப்ளெயிண்ட் கொடுத்தால், அதை எடுத்துக்கொண்டு விசாரிப்பதும் இல்லை. ஹெட் கான்ஸ்டபிளுக்கு இந்த சட்ட சபை அங்கத்தினர் கூடப் பிறந்த தம்பி. அவர் முக்கியஸ்தர்களைக் கொண்டுவந்து பயமுறுத்தியிருக்கிறார். இதே மாதிரி விருதுநகரில் ஒரு சட்ட சபை அங்கத்தினர் பஞ்சாயத்து யூனியன் தேர்தலுக்கு நின்றார். அங்கேயும் இதே மாதிரிப் புகார். விருதுநகரில் அரசாங்க ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர், பயர் ஸ்டேஷனில் உள்ள முக்கிய அதிகாரி, அவர் எனக்கு ஒரு வகையில் பந்துவும் கூட—சொந்தக்காரர் என்று சொன்னாலும் குற்றம் என்று சொன்னால் அதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பி.டி. 6 இன்னொருவர். ஆக இந்த 3 பேர்கள் மேலும் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அடுத்தபடியாக, வத்தலகுண்டு பஞ்சாயத்து யூனியன், அங்கு ஒரு பாராளு மன்ற அங்கத்தினர் நின்றார். புகார் இல்லாவிட்டாலும் ''சென்சேஷன்'' கிளம்பியது. பஞ்சாயத்து யூனியனிலே, அல்லது ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலிலே சட்ட சபை மெம்பர்களுக்கும் பாராளு மன்ற மெம்பர்களுக்கும் ஓட்டுரிமை கிடையாது. ஓட்டுரிமை இல்லாத இவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாதென்று தடுப்பதில் என்ன தவறு இருக்கிறதென்று புரியவில்லை. அரசாங்கம் சிந்திக்க வேண்டும். சட்ட சபை அங்கத்தினர்கள் நிற்கும் இடங்களில்தான் இப்படிப்பட்ட புகார்கள். இம்மாதிரி பல இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தலையிடாமலிருப்பதற்கு உண்டான நிலை இருக்க வேண்டும். இன்று இரண்டு உதாரணங்கள் மட்டும் சொல்லிவிட்டேன். இதை அரசாங்கம் சிந்தனையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

THIRU M. EHIRAJALU rose......

THIRU S. RAGHAVANANDAM : The convention is that no other Member makes a speech after the speech made by the hon. the Leader of the Opposition.

*THIRU M. ETHIRAJALU : I have already requested the Chair to call me. The Leader has permitted me. 5-50 p.m.

திரு. எம். எத்திராஜுலு : மன்றத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் இரண்டொரு விஷயத்தை மட்டும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தென்னாற்காட்டில் இருக்கின்ற அரசாங்கக் கலைக்கல்லூரி சென்ற வாரத்தில் கால வரையின்றி மூடப்பட்டிருக்கிறது என்பதைப் பத்திரிகையில் பார்த்தேன். இந்த மாதிரிக் காலவரையின்றி மூடப்பட்டிருப்பது இது ஒன்று மட்டுமல்ல. என்னுடைய ஜில்லாவில் இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக எங்களுடைய தலைவர் ஒத்தி

வைப்புத் தீர்மானம் கொண்டுவந்தது போல, இதற்கும் ஒரு தீர்மானம் கொண்டுவர இருந்தேன். ஆனால் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசலாம் என்று கைவிட்டுவிட்டேன். கோவையில்கூட நேற்றைய முன் தினம், தமிழ்க் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி கல்லூரிகள் மூடப் பட்டுக் கொண்டேபோனால், நாட்டின் நிலை என்ன ஆவது ?

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் மைக்கைப் பார்த்துப் பேசுகிறார். கன்வென்ஷன் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : இந்த மாதிரி கல்லூரிகள் மூடப்படுவது மிகவும் விசனிக்கத்தக்க விஷயமாகும். என்னுடைய ஜில்லாவில் இருக்கிற கல்லூரி, எங்கள் ஜில்லா, பின் தங்கிய ஜில்லாவாக இருக்கிற காரணத்தினால், பொது மக்களால் மிகவும் முயற்சி செய்யப் பட்டு ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. ஏதோ படம் வைப்பதன் காரணமாக அங்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களுக்குள் கலகம் ஏற்பட்டு கல்லூரி மூட வேண்டிய அளவு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்குத் தெரியாமல் இதை மூடி விடமுடியாது. இப்படி ஒவ்வொரு கல்லூரியும் மூடிக்கொண்டே போனால், இதற்கு ஒரு முடிவு இல்லாமல் இருந்தால், மாணவர்கள் எதிர்காலம் என்னாகும் என்று அரசுத் தரப்பிலும், எதிர்க் கட்சித் தரப்பிலும் உள்ளவர்கள் சிந்தித்துப் பார்த்து முடிவு கட்ட வேண்டுமென்றுதான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்தக் கல்லூரியில் ஏராளமான பின் தங்கிய சமூக மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஏழை எளியவர்களின் பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்கள். செல்வந்தர் குழந்தைகள் அதிகமாக இல்லை. ஆகவே இதைத் திறந்து வைப்பதற்கான சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 350 மார்க்குகள் எஸ்.எஸ்.எல்.சி.யில் வாங்கியவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் 235 மார்க்கு வாங்கியவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணத்தை அங்கேயிருக்கிற முதல்வரிடத்தில் கேட்டபோது, ''380 மார்க் வாங்கினாலும் அவர்கள் ஆங்கிலம்தான் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆங்கிலம் வேண்டுமென சொன்ன பிள்ளைகள் 400 மார்க் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே கிடைக்கவில்லை'' என்றார்கள்.

திரு. எஸ். ராகவானந்தம் : அங்கே யாருடைய படத்தை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள் ?

திரு. எம். எத்திராஜுலு : நான் பொதுவாகச் சொல்லிவிட்டேன். அரசுக்குக் கருத்துக்களைச் சொல்லுகிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. காமராஜர் படம் வேண்டுமென்று மாணவர்கள் எழுப்பிய காரணத்தினால், இந்த நிலைமை.

திரு. என். ராகவானந்தம் : அந்த நிகழ்ச்சியில் யாருடைய படத்தை வைக்க இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் உதவியாக இருக்கும்.

8th September 1970]

திரு. எம். எத்திராஜுலு : நான் எதைச் சொன்னாலும் நேரடியாக அரசுக்கு வருகின்ற தகவல்களை வைத்துக்கொண்டு அவர்களுடைய கருத்தை மாற்ற முடியாதென்று கருதுகிறேன். நான் சொல்லுகிறேன். காமராசருடைய படத்தை வைக்க வேண்டுமென்று மாணவர்கள் எழுப்பி யதன் காரணமாக இரு கோஷ்டிகள் இருக்கின்றன. மாணவர்களுக்குள் ஏற்பட்ட தகராறு தான் அங்கே காரணம்.

மாண்புமிகு திரு. பி.யு. ஷண்முகம் : அது மட்டுமா காரணம்? அங்கே நடந்தது என்ன, அவர்கள் செய்த தப்பு என்ன என்ற முழு விவரத்தையும் சொல்லாமல், அரசாங்கததின் மீது குற்றம் சொல்லக் கூடாது. அந்த மாணவர்கள் என்னென்ன செய்தார்கள்? அவ்வள வையும் சொல்லிவிட்டால், மிக நன்றாக இருக்கும்.

திரு. எம். எத்திராஜுலு : நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்று சொன்னேனே தவிர, அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துகிறேன் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லி யிருந்தால், முழு விவரத்தையும் நான் சொல்ல வேண்டும். ஆகவே தயவு செய்து இதற்கு அமைச்சர் தான் பதில் அளிக்க வேண்டுமே தவிர, நான் பதில் அளிக்க வேண்டியதில்லை.

அடுத்து, 235 மார்க் வாங்கியவர்களுக்கு அங்கே இடம் கொடுத்திருக் கிறார்கள். ஏனென்றால், 400 மார்க் வாங்கியவர்களுக்குக்கூட அங்சே ஆங்கிலத்தில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே 350 மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை என்ற நிலை இருக்கிறது. அதே சூழ்நிலையில் 235 மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கல்லூரி முதல்வரவர்களைக் கேட்டேன். இது அரசாங்கத்தினுடைய உத்தரவு. 235 மார்க் வாங்கியவர்கள் தமிழைப் பாடமொழியாக எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னதினால் முதல் இடம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார். 350 மார்க் வாங்கிய மாணவர்களைக் கூப்பிட்டு, "நீ தமிழைப் பாடமொழியாக ஏற்றுக்கொள்ளுகிறாயா என்று கேட்டீர் களா?" என்று முதல்வரிடம் கேட்டேன். அப்படி நாங்கள் கேட்க உரிமை இல்லை. ஆனால் நாங்கள் அதைக் கேட்காமலேயே 235 மார்க் வாங்கியவர்கள் நாங்கள் தமிழைப் பாடமொழியாக ஏற்றுக்கொள் கிறோம் என்று சொன்ன காரணத்தால், அவர்களுக்குக் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலை பரிசீலிக்கப்பட வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தென்னாற்காடு ஜில்லாவில் பரங்கிப்பேட்டை என்று இருக் கிறது. அங்கே எஸ்டிமேட் கமிட்டியில் நாங்கள் சென்ற காலத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று எங்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு இப்போது அங்கு குழாய் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்பட்டாலும், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தார் அங்கே ஒரு பயலாஜிகல் ஸ்டேஷன், மீன் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே 80 மாணவர்கள் படித்து வருகிறார்கள். ஆனால் குறிப்பாக அந்த பயலாஜிகல் ஸ்டே ஷனுக்கு தண்ணீர் கொடுக்க, குழாய்கள் அமைக்கவில்லை. அந்த இடத்திற்கு 1 பர்லாங்கு தூரத்திலேயே குழாய் நின்று விட்டது.

ஆகையால் குடி தண்ணீர் இல்லாமல் ரொம்பவும் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். பரங்கிப்பேட்டை ஊரிலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கின்ற அந்த மீன் ஆராய்ச்சி நிலையத்திற்குக் குழாய் போடாத காரணத்தினால், மாணவர்கள் அங்கே தங்கிப் படிப்பதற்கு ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக பாதிச் செலவை கூட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக இந்தப் பிரச்னையை நீடிக்கவிடாமல், குழப்பமான சூழ்நிலை ஏற்படாமல், அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வேலை நேரத்தை மாற்றும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். $9\frac{1}{2}$ மணிக்கு வரக்கூடியவர்கள் ஆபிஸிற்கு குறிப்பிட்ட நேரத்தில் பெரும்பாலோர் வருவதில்லை. 10 மணிக்குக் கூட வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரம் சரியாக ஒத்து வரவில்லை என்று என்.ஜி.ஓ. சங்கம் தீர்மானம்கூட போட்டிருக்கிறது. இந்தக் கோட்டையில் நன்றாகக் காரியம் நடக்க வேண்டுமானால் முன் போலவே $10\frac{1}{2}$ முதல் 5 மணி என்ற காலத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் நடக்க வேண்டிய காரியம் சரியாக நடக்காது.

* * * * * *

6-00 p.m. DEPUTY CHAIRMAN : The hon. Member's time is up. This is only an Appropriation Bill and that too, Supplementary Appropriation Bill.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்</u> : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எத்திராஜுலு அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்னைபற்றி, பரங்கிப்பேட்டைக்கு வேண்டிய தண்ணீர் வசதியைப் பற்றி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பிரின்சிபால், கலைக்கல்லூரி, பரங்கிப்பேட்டை, இவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று ஒரு வரியிலே நான் அவர்களுக்கு பதில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், பஞ்சாயத்துத் தேர்தலில் சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் போட்டியிடுவதைத் தடை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்து எனக்கு உடன்பாடான கருத்தல்ல. அப்படியென்றால், எல்லாப் பார்லிமெண்ட் உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே போய்ப் போட்டிபோட வேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற காரணத்திற்காக, தங்கள் கிராமங்களிலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலோ, பள்ளிக்கூடங்கள் போன்ற பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்புப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். எனக்குத் தெரியும், சென்ற பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்து, தங்கள் கிராமத்தில் ஊராட்சித் தலைவராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் அதனையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். குழப்பங்கள் நடந்தன என்றால், சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர்கள்

*Expunged as ordered by the Chair.

[திரு. கே. ஏ. மதியழகன்] [8th September 1970

சம்பந்தப்படுவதால் தான் நடந்தன என்று இல்லை. குழப்பத்தின் தோற்றம், வளர்ச்சி எல்லாம் வேறு விஷயம். இந்த நாட்டில், பாராளு மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் இல்லாமல் இருந் தாலும், அந்தக் குழப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே அவருடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். அதனுலே பாராளு மன்ற உறுப்பினர்கள் போய் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் நிற்கவேண்டுமென்ற அவசியமில்லை. இப்போது பாராளுமன்றம் இன் னும் ஒரு வருடத்தில் முடிந்து விடும். சட்ட மன்றங்கள் முடிந்துவிடும். பொது வாழ்க்கையில் அந்த அரங்கத்தில் அவர்கள் ஆற்றிய தொண்டு, அவர்களுக்கு இருக்கிற ஆற்றல் இவைகளின் அடிப்படையில் ஒவ்வொரு வரும் தங்களுக்குத் தகுந்த மாதிரியான சில அரங்கங்களைத் தேர்ந் தெடுத்துக்கொள்கிருர்கள் என்ற வகையில் நான் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதே மாதிரியாக அரசாங்க அதிகாரிகள் தலையிட்டார்கள் என்று சொன்னுர்கள். இதெல்லாம் கொஞ்சம் அதிகமாகச் சொல்லப்படும் நிகழ்ச்சி என்று எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படித்தான் நாங்கள் சொல்லிக்கொண்டிருந்தோம். அதிகாரிகள் தாங்கள் சட்டப்படி நிறை வேற்றவேண்டிய கடமைகளை நிறைவேற்றுகிற நேரத்தில், அவர்கள் பக்கத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்திருக்கிற நேரத்தில் ஆட்சிக்காகச் செய்கிருர்கள், அரசாங்கத்திற்காகச் செய்கிருர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னுர்கள், ஐ. ஜி. அவர்கள், மாநிலப் போலீஸ் அதிகாரி அவர்கள் விவேகானந்தர் விழாவிற்காக ஜனுதிபதி அவர்களுக்கு பந்தோபஸ்து செய்வது என்ற முறையில் விமானத்தில் போனுர்கள், முதலமைச்சர் அவர்கள் போன விமானத் தில் அவரும் போனுர்கள் என்று சொன்னுர்கள். அதை வைத்துக் கொண்டு ஐ.ஜி. அவர்களை முதலமைச்சர் மிரட்டுகிருர் என்று சொல்ல லாம். இதை அரசியல் கட்சிகள் விமர்சிக்கிற நேரத்தில், அதிகாரிகள் சட்ட வரம்பிற்கு உட்பட்டு, கடமைகளைச் செய்வதற்குக் குந்தகமாக நம்முடைய கருத்துக்கள் அமைந்துவிடக் கூடாது; அவர்கள் நியாயமாக, சீராகச் செய்ய வேண்டிய கடமைகளுக்குக் கெடுதலாக இருந்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொண்டு இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவிற்குப் பேராதரவு தந்து நீங்கள் எல்லோரும் அதற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1970 (L.A. Bill No. 25 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : There are no recommendations to clause 2, the Schedule, clause 1, the Long Title, and the Enacting Formula. So, the Bill will be returned to the Assembly without any recommendations.